**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சாத்தான்குளம்**
**முன்னிலை : செல்வி.ம.வி.தேவி ரக்க்ஷா, B.B.A.,L.L.B (Hons)**
**நீதித்துறை நடுவர், சாத்தான்குளம்**
**2026 ஆம் ஆண்டு, ஜூலை மாதம் 27 ஆம் நாள் திங்கட்கிழமை**
**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 154/2022**
**CNR.No.TNTT11-0050562022**
*****

| | | |
|---|---|---|
| **1.** | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்றத்தின் குற்ற எண். (Name of the Police Station and Crime Number of the Offence) | **அரசுக்காக,**<br>காவல் உதவி ஆய்வாளர்,<br>சாத்தான்குளம் காவல் நிலையம்,<br>(குற்ற எண். 269/2021) |
| **2.** | எதிரிகளின் பெயர் (Name) | 1) **திரு. சத்யசீலன், வயது 36,**<br>த/பெ. வெள்ளத்துரை,<br>3/16A, கருங்கடல்,<br>செம்மண்குடியிருப்பு.<br><br>2) **திரு. முத்துக்குமார், வயது 33,**<br>த/பெ. வெள்ளத்துரை,<br>3/16A, கருங்கடல்,<br>செம்மண்குடியிருப்பு.<br><br>3) **திரு. செந்தில்குமார், வயது 31,**<br>த/பெ. வெள்ளத்துரை,<br>3/16A, கருங்கடல்,<br>செம்மண்குடியிருப்பு.<br><br>4) **திரு. ராஜதுரை, வயது 29,**<br>த/பெ. வெள்ளத்துரை,<br>3/16A, கருங்கடல்,<br>செம்மண்குடியிருப்பு.<br><br>5) **திரு. சிவா (எ) சிவக்குமார், வயது 28,**<br>த/பெ. பாண்டி,<br>28/37, அருளுர், கருங்கடல்,<br>செம்மண்குடியிருப்பு.<br>கூலி |
| **3.** | எதிரிகளின் தந்தை பெயர் (Father's Name) | |
| **4.** | எதிரிகளின் தொழில் (Occupation) | |
| **5.** | எதிரிகளின் முகவரி (Residence) | |
| **6.** | எதிரிகளின் வயது (Age) | |
| **7.** | குற்ற நிகழ்வு நாள் (Occurrence) | 17.10.2021 |
| **8.** | புகார் தேதி (Complaint) | 17.10.2021 |
| **9.** | எதிரிகள் கைது செய்யப்பட்ட தேதி (Apprehension) | எதிரிகள் முன்ஜாமீன் பெற்றதால் கைது செய்யப்படவில்லை |
| **10.** | எதிரிகள் பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் (Release on Bail) | எதிரிகள் முன்ஜாமீன் பெற்றதால் கைது செய்யப்படவில்லை |
| **11.** | Commitment | ----- |
| **12.** | விசாரணை ஆரம்பிக்கப்பட்ட தேதி (Commencement of Trial) | 25.05.2026 |
| **13.** | விசாரணை முடிக்கப்பட்ட தேதி (Closure of Trial) | 27.07.2026 |



DEVI RAKSHA M V Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.07.27 15:42:26 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| **14.** | தண்டனை அல்லது உத்தரவு (Sentence or Order) | முடிவில், 1 ஆவது எதிரி இ.த.ச பிரிவுகள் 148, 294(b), 324, 506(ii) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் கீழும், 2 முதல் 5 எதிரிகள் இ.த.ச பிரிவுகள் 148, 294(b), 323, 506(ii) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் கீழான குற்றச்சாட்டுகளுக்கு குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து, அவர்களை கு.வி.மு.ச பிரிவு 248(1) இன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. | | |
| **15.** | தீர்ப்பின் நகல் வழங்குதல் அல்லது குற்றம் சாட்டப்பட்டவர் குறித்த முடிவு (Service of Copy of Judgment or Finding on Accused) | எதிரிகள் விடுதலை செய்யப்படுகிறார்கள் | | |
| **16.** | கு.வி.மு.ச பிரிவு 313(1)(b) இன் கீழ் எதிரியை விசாரணை செய்த நாள் (Date of examination of accused U/s 313(1)(b) | 27.07.2026 | | |
| **17.** | சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்குவிசாரணை செய்யப்பட்ட நாள் (Date of examination in chief and cross examination of witnesses) | சாட்சிகள் | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | PW1 | 16.07.2026 | 16.07.2026 |
| | | PW2 | 16.07.2026 | 16.07.2026 |
| | | PW3 | 16.07.2026 | 16.07.2026 |
| | | PW4 | 22.07.2026 | 22.07.2026 |
| **18.** | வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் (Date of Cognizance) | 18.08.2022 | | |

இவ்வழக்கானது என் முன்பு 27.07.2026 இன்று இறுதி விசாரணைக்காக வந்தபொழுது எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. அருண் மணிகண்டன் அவர்கள் முன்னிலையாகியும் அரசு தரப்பில் குற்றவியல் வழக்கறிஞர் நிலை-II திருமதி. ப்ரீத்தி ராணி அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதத்தை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்த வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்....

**தீர்ப்புரை**

**1. குற்றச்சாட்டு :-**

**1.1.** கடந்த 15.10.2021 ஆம் தேதி செம்மன்குடியிருப்பு அம்மன் கோவிலில் விளக்கு பூஜையின் போது புகார்தாரருக்கும் எதிரிக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டது. இந்நிலையில் கடந்த 17.10.2021 ஆம் தேதி காலை 9.30 மணியளவில் ஊர் தர்மகர்த்தா சொன்னதாக சுடலைமணி என்பவர் தசரா குழுவினர் கோயிலுக்குள் செல்லக்கூடாது வெளியே செட்டில் தான் இருக்க வேண்டும் என்று இவ்வழக்கின் புகார்தாரரான சித்திரை பாப்பா என்பவரது கணவரான சாட்சி 2 முத்துராஜனிடம் சொல்லியுள்ளார். கோவிலுக்கு சென்று விட்டு வந்து பேசிக்கொள்ளலாம் என சாட்சி 2 கோவிலுக்கு சென்றுள்ளார். இதன் காரணமாக கடந்த 17.10.2021 ஆம் தேதி மாலை 4.00 மணியளவில் புகார்தாரர் செம்மன்குடியிருப்பிலுள்ள கோவில் தெருவிலுள்ள அவரது வீட்டில்



DEVI RAKSHA M V Digitally signed by DEVI RAKSHA M V Date: 2026.07.27 15:42:31 +0530

தனியாக இருந்த போது, எதிரிகள் கையில் கம்பு, அருவாளுடன் வந்து புகார்தாரரின் வீட்டின் முன்பு ஒன்று கூடி புகார்தாரரைப் பார்த்து ஏ நொண்டி தேவடியா மலட்டு புண்ட வெளியூர் காரி உனக்கும் உன் மாப்பிள்ளைக்கும் எங்க கோயில்ல என்ன சம்பந்தம் என்று ஆபாசமான வார்த்தைகளால் பேசி, 1 வது எதிரி கையில் வைத்திருந்த அருவாளால் புகார்தாரரின் வலது கை முட்டிக்கு கீழ் வெட்டியும், 2 முதல் 5 எதிரிகள் புகார்தாரரை கையாலும், காலாலும், கம்பாலும் தாக்கி, புகார்தாரரைப் பார்த்து உன் மாப்பிள்ளையையும் தசரா குழுவினரையும் வெட்டி கொல்லாமல் விடமாட்டோம் என கொலைமிரட்டல் விடுத்து, பொதுஇடத்தில் வைத்து புகார்தாரருக்கு மிகுந்த அவமானத்தையும், மனஉளைச்சலையும் ஏற்படுத்தி குற்றம் புரிந்துள்ளார்கள்.

**1.2.** எனவே, 1 ஆவது எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 147, 294(b), 323, 324, 506(ii) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் கீழும், 2 முதல் 5 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 147, 294(b), 323, 506(ii) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் கீழான குற்றச்சாட்டுகளுக்கு குற்றவாளிகள் என்று அரசு தரப்பில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. <u>கு.வி.மு.ச பிரிவு 207 இன் கீழ் நகல்</u> :-**

அரசு தரப்பில் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து ஆவணங்களின் நகல் கு.வி.மு.ச பிரிவு 207-இன் கீழ் எதிரிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

**3. <u>கு.வி.மு.ச பிரிவு 239 மற்றும் 240 இன் கீழ் விசாரணை</u> :-**

**3.1.** எதிரிகளுக்கு போதுமான கால அவகாசம் கொடுத்த பிறகு, அவர்கள் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்ற இறுதி அறிக்கை பற்றி கேட்ட போது, அவர்கள் பொய் வழக்கு என்றும், குற்றவாளிகள் இல்லை என்றும் கூறினார்கள்.

**3.2.** இருதரப்பிலும் கேட்கப்பட்டு, வழக்கு கோப்புகளை ஆய்வு செய்த போது, 1 ஆவது எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 148, 294(b), 324, 506(ii) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் கீழும், 2 முதல் 5 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 148, 294(b), 323, 506(ii) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் கீழும் குற்றச்சாட்டுகள் வனைந்து, குற்ற சாராம்ச சங்கதிகள் குறித்து அவர்களிடம் விளக்கி கூறிய போது, எதிரிகள் பொய் வழக்கு என்றும், வழக்கு விசாரணை செய்யப்பட வேண்டும் என்றும் கூறினார்கள். ஆகையால் இவ்வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**4. <u>அரசு தரப்பு சாட்சிகள்</u> :-**

பட்டியல் சாட்சிகளில் இருந்து மூன்று நபர்களும் கூடுதல் சாட்சியாக காவல் உதவி ஆய்வாளர் திரு.செல்வராஜ் என்பவரும் அ.சா.1 முதல் அ.சா.4 ஆக அரசு தரப்பில் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள்; அவர்கள் மூலம் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.06 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5. <u>அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசு தரப்பு வழக்கு</u> :-**

**5.1.** அ.சா.1 – சித்திரைபாப்பா, செம்மன்குடியிருப்பில் குடியிருந்து வந்தார். கடந்த 15.10.2021 ஆம் தேதி செம்மன்குடியிருப்பு அம்மன் கோவிலில் விளக்கு பூஜையின் போது அவருக்கும் எதிரிகளுக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டது. இந்நிலையில் கடந்த 17.10.2021 ஆம் தேதி காலை 9.30 மணியளவில் ஊர் தர்மகர்த்தா சொன்னதாக சுடலைமணி என்பவர் தசரா குழுவினர் கோயிலுக்குள் செல்லக்கூடாது வெளியே செட்டில் தான் இருக்க வேண்டும் என்று அ.சா.1 சித்திரை பாப்பா என்பவரது கணவரான சாட்சி 2 முத்துராஜனிடம் சொல்லியுள்ளார். கோவிலுக்கு சென்று விட்டு வந்து பேசிக்கொள்ளலாம் என


DEVI RAKSHA M V Digitally signed by DEVI RAKSHA M V Date: 2026.07.27 15:42:35 +0530

சாட்சி 2 கோவிலுக்கு சென்றுள்ளார்.

**5.2.** கடந்த 17.10.2021 ஆம் தேதி மாலை 4.00 மணியளவில் அ.சா.1 செம்மன்குடியிருப்பிலுள்ள கோவில் தெருவிலுள்ள அவரது வீட்டில் தனியாக இருந்த போது, எதிரிகள் கையில் கம்பு, அருவாளுடன் வந்து அ.சா.1 இன் வீட்டின் முன்பு ஒன்று கூடி அ.சா.1 ஐ பார்த்து ஏ நொண்டி தேவடியா மலட்டு புண்ட வெளியூர் காரி உனக்கும் உன் மாப்பிள்ளைக்கும் எங்க கோயில்ல என்ன சம்பந்தம் என்று ஆபாசமான வார்த்தைகளால் பேசி, 1 ஆவது எதிரி கையில் வைத்திருந்த அருவாளால் அ.சா.1 இன் வலது கை முட்டிக்கு கீழ் வெட்டியும், 2 முதல் 5 எதிரிகள் அ.சா.1 ஐ கையாலும், காலாலும், கம்பாலும் தாக்கி, அருவாள் மற்றும் கம்பை காட்டி உன் மாப்பிள்ளையையும் தசரா குழுவினரையும் வெட்டி கொல்லாமல் விடமாட்டோம் என கொலைமிரட்டல் விடுத்தனர். இந்த பிரச்சனைக்கு முருகன் மற்றும் மணிகண்டன் தான் காரணம் என்றும், பின்பு சாத்தான்குளம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தார்.

**5.3.** கடந்த 17.10.2021 ஆம் தேதி 17.30 மணிக்கு சாத்தான்குளம் காவல்நிலைய முதல் நிலை காவலர் முருகன் என்பவர் சாத்தான்குளம் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற சித்திரை பாப்பா என்பவரது காயத்தகவலை பெற்று சாத்தான்குளம் அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு சிகிச்சையில் இருந்த சித்திரை பாப்பா என்பவரிடம் நடந்த சம்பவத்தை வாக்குமூலம் பதிவு செய்தார். பின்பு அந்த புகார்வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப சாத்தான்குளம் நிலைய குற்ற எண். 269/2021, இ.த.ச பிரிவுகள் 147, 294(b), 323, 324, 506(ii) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் கீழ் முதல் தகவல் அறிக்கை (அ.சா.ஆ.3) பதிவு செய்தார்.

**5.4.** வழக்கை மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்ட காவல் உதவி ஆய்வாளர் திரு. அருள்சாம் ராஜ் கடந்த 17.10.2021 ஆம் தேதி இரவு சுமார் 20.00 மணியளவில் வழக்கு சம்பவ இடமான செம்மன்குடியிருப்பு சென்று சாட்சிகள் ராஜதுரை, சிவபெருமாள் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, சம்பவ இடத்தையும் அதன் சுற்றுப்புறங்களையும் பார்வையிட்டு பார்வை மகசர் (அ.சா.ஆ.4) மற்றும் மாதிரி வரைபடம் (அ.சா.ஆ.5) தயார் செய்தார். பின்னர் சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். பின்பு இவ்வழக்கில் காயம்பட்ட வாதிக்கு சிகிச்சையளித்த மருத்துவரை விசாரித்து வாக்குமூலம் பெற்றும், பின் வாதிக்கு ஏற்பட்ட காயத்திற்கு காயச்சான்றிதழ் (அ.சா.ஆ.6) கிடைக்கப் பெற்றார். அவரது சாட்சியத்திலும், சாட்சிகளின் விசாரணையிலும் சம்பவம் அனைத்தும் உண்மையென தெரிந்ததால் எதிரிகள் மீது 20.11.2021 அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

**6. <u>கு.வி.மு.ச பிரிவு 313 (1) (ஆ) இன் கீழ் விசாரணை</u> :-**

**6.1.** மேற்கண்ட அரசு தரப்பு சாட்சியங்களில் இருந்து எதிரிகளுக்கு பாதகமாக தோன்றக்கூடிய சாட்சியங்களையும், சூழ்நிலைகளையும் கு.வி.மு.ச பிரிவு 313 (1)(ஆ) இன் கீழ் தொகுத்து, அவர்களிடம் விளக்கி கேட்ட போது, எதிரிகள் பொய் சாட்சி என்றும், பொய் வழக்கு என்றும் மறுத்தார்கள்.

**6.2.** மேலும், எதிரிகள் தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் இல்லை என்று கூறினார்கள்.

**7. <u>இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை</u> :-**

1 ஆவது எதிரி மீது வனையப்பட்டுள்ள இ.த.ச பிரிவுகள் 148, 294(b), 324, 506(ii) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் கீழும், 2 முதல் 5 எதிரிகள் மீது வனையப்பட்டுள்ள இ.த.ச பிரிவுகள் 148, 294(b), 323, 506(ii) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் கீழான குற்றச்சாட்டுகள் நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசு தரப்பில்



DEVI RAKSHA M V
Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.07.27 15:42:39 +0530

நிரூபிக்கப்பட்டுள்ளதா?

**8. <u>சாட்சியங்கள் மதிப்பீடு</u> :-**

**8.1.** இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 சித்திரைபாப்பாவின் சாட்சியத்தை ஆராயும்போது, அ.சா.1 அவருடைய சாட்சியத்தில், அவரும் எதிரிகளும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் என்பதால் தற்போது சமாதானமாக போய்விட்டதாகவும், அவர்களை சமாதானமாக போகும்படி யாரும் தூண்டவில்லை என்றும், புகார்மனுவில் உள்ள சங்கதிகள் குறித்து அவருக்கு எதுவும் தெரியாது என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**8.2.** கேள்வியறிவு சாட்சியான முத்துராஜன் அரசு தரப்பில் அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். கண்ணுற்ற சாட்சியான ராஜன் அரசு தரப்பில் அ.சா.3 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.2 மற்றும் அ.சா.3 இருவரின் சாட்சியத்தை ஆராயும்போது, எதிரிகளை தெரியும் என்றும், தற்போது அவர்களுடன் சமாதானமாகிவிட்டதாகவும், சமாதானமாக போகும்படி யாரும் தூண்டவில்லை என்றும், வழக்கு சம்பவம் குறித்து எதுவும் தெரியாது என்றும் சாட்சியமளித்துள்ளார்கள்.

**8.3.** இந்த வழக்கில் அ.சா.1 – சித்திரைபாப்பா கொடுத்ததாக உள்ள புகார்மனுவிற்கும், அதன் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டுள்ள அரசு தரப்பு வழக்கிற்கும் முரணாக அவர் சாட்சியம் அளித்ததால் அரசு தரப்பில் அவரை பிறழ் சாட்சியாக்கி குறுக்குவிசாரணை செய்தபோதிலும் அவரிடமிருந்து அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக எந்தவொரு சங்கதிகளும் வெளிக்கொணரப்படவில்லை.

**8.4.** மேலும், அ.சா.ஆ.2 – புகார்மனுவிலுள்ள கையெழுத்து அவருடையது என்று அ.சா.1 – சித்திரைபாப்பா ஒப்புக்கொண்ட போதிலும், அதில் எழுதியுள்ள வாசகங்களை உறுதிபடுத்த சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. ஆகையால், இந்த வழக்கில் கொடுக்கப்பட்டுள்ளதாக உள்ள புகார்மனு அ.சா.1 – சித்திரைபாப்பாவால் கொடுக்கப்பட்டதா? என்பதும் சந்தேகம் கொள்ளும் வகையில் அமைகிறது. ஆவணத்தில் உள்ள கையொப்பத்தை நிரூபிப்பது வேறு, அதன் உள்ளடக்கத்தை நிரூபிப்பது வேறு என்பதால், அ.சா.1 – சித்திரைபாப்பாவின் சாட்சியம் மூலம் அ.சா.ஆ.2 புகார்மனு அவரால் கொடுக்கப்பட்டது என்று நிரூபிக்கப்படவில்லை.

**8.5.** தவிர, அ.சா.1 முதல் அ.சா.3 தற்போது எதிரிகளுடன் சமாதானமாகிவிட்டதாகவும், வழக்கு சம்பந்தமாக அவர்களுக்கு எதுவும் தெரியாது என்றும் சாட்சியமளித்துள்ளதால், அரசு தரப்பில் இதர சாட்சிகள் விலக்கிக்கொள்ளப்பட்டு கூடுதல் சாட்சியாக காவல் உதவி ஆய்வாளர் செல்வராஜ் என்பவர் அ.சா.4 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவருடைய சாட்சியத்தை தவிர இந்த வழக்கில் எதிரிகளுக்கு எதிராக வேறு சாட்சியம் எதுவும் அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்படவில்லை. இந்த சூழ்நிலையில், புலன்விசாரணை கோப்புகளை பார்த்து சாட்சியமளித்துள்ள உதவி ஆய்வாளரின் சாட்சியம் மட்டுமே எதிரிகளை குற்றவாளிகள் என்று முடிவு செய்ய போதுமானதல்ல.

**8.6.** இதன் மேலே செய்யப்பட்ட பரிசீலனைகளின் ஒட்டுமொத்த தொகுப்பாக, அரசு தரப்பு வழக்கு நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படாததால் எதிரிகளுக்கு இந்த வழக்கில் சந்தேகத்தின் பலன் கிடைக்கக் கூடியது என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**9. <u>முடிவு:-</u>**

**9.1.** முடிவில், 1 ஆவது எதிரி இ.த.ச பிரிவுகள் 148, 294(b), 324, 506(ii) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் கீழும், 2 முதல் 5 எதிரிகள் இ.த.ச பிரிவுகள் 148, 294(b), 323, 506(ii) மற்றும் பிரிவு 4



DEVI RAKSHA M V Digitally signed by DEVI RAKSHA M V Date: 2026.07.27 15:42:42 +0530

தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் கீழான குற்றச்சாட்டுகளுக்கு குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து, அவர்களை கு.வி.மு.ச பிரிவு 248(1) இன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

**9.2.** இவ்வழக்கில் எதிரிகள் ஆஜராக எழுதிக் கொடுத்த பிணை ஆவணம் இரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

**9.3.** இவ்வழக்கில் வழக்கு சொத்துப்பொருள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

இத்தீர்ப்புரை, என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டும், என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டும், இன்று 27.07.2026 ஆம் தேதி திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

DEVI RAKSHA M V Digitally signed by DEVI RAKSHA M V Date: 2026.07.27 15:42:44 +0530

நீதித்துறை நடுவர்
சாத்தான்குளம்

**<u>பிற்சேர்க்கை</u>**

**1. <u>அரசு தரப்பு சாட்சிகள்</u> :-**

| அரசு தரப்பு சாட்சிகள் வரிசை எண் | அரசு தரப்பு சாட்சிகளின் பெயர் | அரசு தரப்பு சாட்சிகளின் விவரம் |
|---|---|---|
| அ.சா.1 | திருமதி. சித்திரைபாப்பா | நிகழ்நிலை புகார்தாரர் |
| அ.சா.2 | திரு. முத்துராஜன் | கேள்வியறிவு சாட்சி |
| அ.சா.3 | திரு. ராஜன் | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.4 | திரு. செல்வராஜ் | காவல் உதவி ஆய்வாளர் |

**2. <u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u> :-**

| வரிசை எண் | தேதி | ஆவண விபரம் | நிரூபணம் |
|---|---|---|---|
| அ.சா.ஆ.1 | 17.10.2021 | புகார்மனுவில் உள்ள அ.சா.1 இன் கையெழுத்து மட்டும் | அ.சா.1 இன் மூலமாக |
| அ.சா.ஆ.2 | 17.10.2021 | புகார்மனு | அ.சா.4 இன் மூலமாக |
| அ.சா.ஆ.3 | 17.10.2021 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.4 இன் மூலமாக |
| அ.சா.ஆ.4 | 17.10.2021 | பார்வைமகஜர் | அ.சா.4 இன் மூலமாக |
| அ.சா.ஆ.5 | 17.10.2021 | மாதிரி வரைபடம் | அ.சா.4 இன் மூலமாக |
| அ.சா.ஆ.6 | 17.10.2021 | அ.சா.1 இன் காயச்சான்றிதழ் | அ.சா.4 இன் மூலமாக |

**3. <u>அரசு தரப்பு சான்று பொருள்</u> :-**இல்லை

**4. <u>எதிரிகள் தரப்பு சாட்சிகள்</u> :-** இல்லை

**5. <u>எதிரிகள் தரப்பு சான்றாவணங்கள்</u> :-** இல்லை

**6. <u>எதிரிகள் தரப்பு சான்று பொருட்கள்</u> :-** இல்லை

**<u>Case Summary</u>**

**1.** எதிரிகள் சிறையில் இருந்த நாட்கள் **:-** இல்லை

**2.** குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த நாள் - 28.07.2022

**3.** எதிரிகள் முதலாவதாக விசாரிக்கப்பட்ட நாள் - 25.05.2026



DEVI RAKSHA M V Digitally signed by DEVI RAKSHA M V Date: 2026.07.27 15:42:48 +0530

**4.** எதிரிகள் மீதான குற்றச்சாட்டு விளக்கி கேட்ட நாள் - 25.05.2026

**5.** இடைக்கால மனு விபரம் **:-**இல்லை

**6.** எதிரிகள் தலைமறைவாக இருந்த விவரம் **:-** இல்லை

**7.** மாண்பமை மேல் நீதிமன்ற தடை உத்தரவு விபரம் - இல்லை

DEVI RAKSHA M V Digitally signed by DEVI RAKSHA M V Date: 2026.07.27 15:42:51 +0530

நீதித்துறை நடுவர்
சாத்தான்குளம்

**குறிப்பு :-**

**1.** விசாரணை காலத்தில் எதிரிகள் பிணையில் இருந்தார்கள்.

**2.** சாட்சிகள் 3 வாய்தாக்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

**3.** தீர்ப்பு விபரம் காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது.